வகுப்பு : 10

தேர்வு எண்

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - நவம்பர் - 2022

## தமிழ்

நேரம் : 1.30 மணி] [மொத்த மதிப்பெண்கள் 50

பகுதி – I

7X1=7

சரியான விடையைத் தெரிவு செய்து குறியீட்டுடன் எழுதுக.

1. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது
   (அ) திருக்குறள் (ஆ) கம்பராமாயணம் (இ) புறநானூறு (ஈ) சிலப்பதிகாரம்
2. "உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன்" என்றும் "பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன்" என்றும் பாராட்டப்படுவோர்
   (அ) உதியன்; சேரலாதன் (ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்
   (இ) பேகன்; கிள்ளிவளவன் (ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி
3. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
   (அ) அறிவியல் முன்னேற்றம் (ஆ) வெளிநாட்டு முதலீடுகள்
   (இ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் (ஈ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்
4. இரு நாட்டு அரசர்களும் தும்பை பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம்
   (அ) ஆநிரை கவர்தல் (ஆ) வலிமையை நிலைநாட்ட
   (இ) கோட்டையை முற்றுகையிட (ஈ) நாட்டைக் கைப்பற்றுதல்
5. வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல் – என்னும் அடி குறிப்பிடுவது
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   இ) இடையறாது அறப்பணி செய்தலை ஈ) வண்ணம் பூசுவதை

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (6,7) விடை தருக.

பாசவர், வாசர், பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்;
கஞ்ச காரரும் செம்புசெய் குநரும்

6. 'பாசவர்' என்ற சொல்லின் பொருள் யாது?
   அ) மீன் விற்போர் ஆ) வெற்றிலை விற்போர்
   இ) எண்ணெய் விற்போர் ஈ) நறுமணப் பொருள் விற்போர்
7. இப்பாடலின் ஆசிரியர் யார்?
   அ) இளங்கோவடிகள் ஆ) நாதகுத்தனார் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) கு.ப.ராசகோபாலன்

பகுதி – II பிரிவு – அ

2x2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.

8. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
   அ. தமிழர், போரிலும் அறநெறிகளைப் பின்பற்றினர்.
   ஆ. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார்.
9. குறிப்பு வரைக. "அவையம்"
10. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

பிரிவு – ஆ

3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி.

11. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.
12. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டு தருக.
13. தொகைச் சொற்களை விரித்து எழுதுக. ஐந்திணை, அறுசுவை
14. மரபுத் தொடருக்கான பொருள் அறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
    i) மனக்கோட்டை ii) ஆறப்போடுதல்
15. கலைச்சொற்களை எழுதுக. i) Document ii) Philosopher



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593

பகுதி - III பிரிவு – அ

ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

16. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

17. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

பிரிவு – ஆ

ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

18. "மாற்றம் எனது மானிடத் தத்துவம்" எனத் தொடங்கும் காலக்கணிதம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

19. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?

பிரிவு – இ

ஏதேனும் ஒரு வினாவிற்கு மட்டும் விடையளி. 1X3=3

20. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

21. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 3X4=12

22. உமது ஊரில் பழுதடைந்த மின்விளக்குகளைச் சரி செய்யக் கோரி மின்வாரிய அலுவலருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் "உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்" என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்த நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

23. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



24. மொழிபெயர்க்க.

*Among the five geographical divisions of the Tamil Country is Sangam literature, the Marutham region was fit for cultivation as it had themost fertile lands. The property of a farmer depended on getting the necesary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.*

(அல்லது)

அரசால் நிறுவப்படும் கட்டிடங்கள், கல்வெட்டுகள், கோயில்கள், பழமையான நினைவுச் சின்னங்கள் முதலியவற்றை பராமரிக்கவும், பாதுகாக்கவும் உங்களால் இயன்ற செயல்களைப் பட்டியலிடுக.

பகுதி – V

அனைத்து வினாக்களுக்கும் விடையளி. 2X6=

25. சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பி எழுதுக.

(அல்லது)

"இராமானுஜர்" நாடகத்தினைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கி எழுதுக.

26. "மாணவப் பருவமும் நாட்டுப்பற்றும்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (முன்னுரை – நாட்டு விழாக்க விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – முடிவுரை)

(அல்லது)

"சாலை விதிகளை மதிப்போம்" என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக. (முன்னுரை – சாலை விதிகள் – எச்சரி விளக்குகள் – ஓட்டுநர் உரிமம் – ஊர்தி ஓட்டுநருக்கான நெறிகள் – விதிகளை மதிப்போம்! விபத்தி தடுப்போம்! – முடிவுரை)



Kindly send me your district question papers to our whatsapp number: 7358965593